செய்தி வெளியீடு எண்: 290 நாள்: 17.05.2019

## செய்தி வெளியீடு

## 4 சட்டமன்ற தொகுதிகளில் இடைத்தேர்தல் மற்றும் 13 வாக்குச் சாவடிகளில் மறுவாக்குப்பதிவு தொடர்பாக 10 மாவட்ட ஆட்சியர்களுடன் காணொளி காட்சி மூலமாக தலைமைதேர்தல் அதிகாரி ஆய்வு

எதிர்வரும் 19–ம் தேதி சூலூர், அரவக்குறிச்சி, திருப்பரங்குன்றம் மற்றும் ஒட்டபிடாரம் ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளின் வாக்குப்பதிவு மற்றும் 13 வாக்குச்சாவடிகளில் மறுவாக்குப்பதிவு நடத்துவதற்கான அனைத்து முன்னேற்பாடுகளும் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் இன்று 10 மாவட்ட ஆட்சி தலைவர்கள், மாநகர காவல் ஆணையர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் ஆகியோர்களுடன் முன்னேற்பாடுகள் குறித்து தலைமை தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாகு, இ.ஆ.ப., அவர்கள் காணொளி காட்சி மூலமாக இன்று (17.05.2019) தலைமை செயலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

ஆய்வின்பொழுது வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களுக்கு செய்யப்பட்டுள்ள வசதிகள், மாற்றுத்திறனாளிக்கு செய்யப்பட்டுள்ள வசதிகள், வாக்குப்பதிவிற்குத் தேவையான தளவாடப்பொருட்கள், பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் வாக்கு எண்ணும் மையங்களுக்கு வாக்குப்பதிவு இயந்திரங்களை பாதுகாப்பாக எடுத்துச் செல்லுதல், வாக்குப்பதிவு இயந்திரங்களை எடுத்துச் செல்லும் வாகனங்களில் ஜி.பி.எஸ் கருவி பொருத்தி கண்காணித்தல் ஆகியவை குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், வாக்குப்பதிவு நாளன்று சுவீதா மற்றும் பி.எம்.எஸ் செயலி மூலம் அறிக்கைகளை பதிவிடுதல், வாக்குப்பதிவு அலுவலர்கள், கன்ட்ரோல் யூனிட் மற்றும் விவி.பேட் கையாலும் அலுவலர்கள் ஆகியோருக்கு உரிய பயிற்சிகள் மற்றும் அவர்கள் கடைபிடிக்க வேண்டிய

6 அறிவுரைகள் ஆகியையவை குறித்தும் ஆய்வு செய்யப்பட்டு அறிவுரைகள் வழங்கப்பட்டது.

வாக்குப்பதிவு நடைபெறும் பகுதிகளில் சட்டத்திற்கு புறம்பாக பணம் எடுத்துச்செல்லுதல், வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்குதல் ஆகியவற்றை கண்காணித்து அதனை தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டது.

இவ்வாய்வு கூட்டத்தில், காவல்துறை இயக்குனர் (தேர்தல்) திரு. அசுதோஷ் சுக்லா, இ.கா.ப., கூடுதல்தலைமை தேர்தல் அலுவலர்கள் திரு.எம்.பாலாஜி, இ.ஆ.ப., திரு. வி. ராஜாராமன், இ.ஆ.ப., இணை தலைமை தேல்தல் அதிகாரிகள் திரு. தீபக்ஜேக்கப், இ.ஆ.ப., திரு. வே. மணிகண்டன் காவல்துறை தேர்தல் ஒருங்கிணைப்பு அதிகாரிகள் திரு. ஜெயராமன், இ.கா.ப., திரு. சேஷசாய் இ.கா.ப., 10 மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**